| O.S.No. 42/2025 | PW1: திருமதி. ஜெயலட்சுமி<br>க/பெ. திரு. சிவகுமார் | 04-02-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் செய்யாரில் வசிக்கிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். பிரதிவாதிகளை 7, 8 ஆண்டுகளாக தெரியும். நான் ஏற்கனவே குபேரன் பைனான்ஸ் என்ற பைனான்ஸ் நிறுவனத்தை வைத்திருந்தேன் என்றால் சரிதான். அந்த பைனான்ஸில் நான் சீட்டு நடத்தி வந்தேன் என்றால் இல்லை. 2–ம் பிரதிவாதி பபிதா 2012–ம் வருடம் என்னிடம் ரூ.1,00,000/– சீட்டு என இரண்டு சீட்டுகளை போட்டார் என்றால் இல்லை. அந்த சீட்டில் 2–ம் பிரதிவாதி மாதம் ரூ.5,000/– வீதம் என என்னிடம் சீட்டு கட்டினார் என்றால் இல்லை. 2–ம் பிரதிவாதி ஒரு சீட்டில் ரூ.80,000/– மும், மற்றொரு சீட்டில் 14 மாதங்களுக்கு தலா ரூ.5,000/– வீதம் பணம் கட்டியுள்ளார் என்று சொன்னால் இல்லை. பிரதிவாதிகள் எனக்கு உண்மையாக கொடுக்க வேண்டிய மொத்த தொகை ரூ.50,000/– என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் சீட்டு கட்ட முடியாததால் என்னிடம் பைனான்ஸில் கடன் வாங்கினார்கள் என்றால் அது பொய் ஆகும். பிரதிவாதிகள் எனக்கு சீட்டு தள்ளு போக மொத்தமாக கொடுக்க வேண்டிய தொகை ரூ.52,000/– என்று சொன்னால் சரியல்ல.

2. கடந்த 2019–ம் ஆண்டு பிரதிவாதிகளுக்கு கொடுக்க வேண்டிய ரூ.52,000/– பணத்திற்கு வட்டியுடன் சேர்த்து நான் பிரதிவாதிகளிடம் ரூ.82,000/– கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதன் பிறகு 2–ம் பிரதிவாதி சிறுக சிறுக G–Pay மூலமாக ரூ.70,000/– வரை கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அதன்பிறகு நான், 2–ம் பிரதிவாதியின் மாமா கோபால் என்பவரிடம் மீத பணத்தை பிரதிவாதிகள் எனக்கு கொடுக்க வேண்டும் என்று சொன்னேன் என்று சொன்னால் சரிதான்.

3. பிரதிவாதிகள் ரூ.82,000/- எனக்கு கொடுக்க ஒப்புக்கொண்டார்கள் என்று சொன்னால் அது பொய் ஆகும். அதன்பிறகு நான் பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்தேன். பிரதிவாதிகள் என்னிடம் நேரடியாக எந்த கடனும் வாங்கவில்லை என்றாலும், சீட்டு கட்டியதற்காகத்தான் அவர்கள் எனக்கு பணம் கொடுக்க வேண்டியிருந்தது என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் பெற்ற பணத்திற்கு வெற்று பாண்டில் கையெழுத்து வாங்கிக்கொண்டு அதனை மோசடியாக பூர்த்தி செய்து பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சீட்டு பணத்தினை தவிர பிரதிவாதிகள் வேறு எந்த வகையிலும் எனக்கு பணம் கொடுக்க வேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.04 15:53:12 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**